Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 78

வியாழக்கிழமை
12 பெப்ரவரி 2026

தை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வடக்கில் இன்று மீண்டும் மழை!

யாழ்ப்பாணம், பெப். 12
வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென் கிழக்குத் திசையில் உருவாகும் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக வடக்கு மாகாணத்தில் இன்றுமுதல் மீண்டும் மழைக்குச் சாத்தியம் உள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர்நாகமுத்து பிரதீபராஜா

»11

அல்லைப்பிட்டி விவகாரம்

## கைதான இருவருக்கும் நீதிமன்றத்தால் பிணை

யாழ்ப்பாணம், பெப். 12
யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த வாகனத்தில் இருந்த இருவரையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுவித்தது.
அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த வாகனத்தின் மீது நடத்தப்

»11

தமிழ்க் கட்சிகளை ஓரணியில் இணைக்கும்

# சுவிஸ் தூதரக முயற்சியை குழப்பும் எண்ணம் இல்லை!

கஜேந்திரகுமார் எம்.பி. விளக்கம்



**கொழும்பு, பெப்ரவரி 12**
**இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், தமிழ்க் கட்சிகளை ஓரணியில் இணைக்கும் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் முயற்சியைக் குழப்பும் நோக்கம் எமக்கு இல்லை - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

»11

## அத்துகோரள படுகொலை; 12 பேருக்கு தூக்கு

கொழும்பு, பெப். 12
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 12 பிரதிவாதிகளுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.
அரகலய போராட்டம்

»11

பருத்தித்துறை

## கலங்கரை விளக்கத்தை விடுவிக்கிறது கடற்படை

யாழ்ப்பாணம், பெப். 12
பருத்தித்துறை கலங்கரை விளக்கத்தை சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டுக்காக விடுவிப்பது தொடர்பில், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படையினருக்கு இடையே நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.
பருத்தித்துறையின் அடையாளமான கலங்கரை விளக்கத்தை, சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்காக கடற்படை அங்கிருந்து

»11

## அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு: அவசரகாலச் சட்டமே காரணம்!

யாழ்ப்பாணம், பெப். 12
அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த ஹைஏஸ் வாகனத்தின் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு, நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளதே பிர

»11

திருமலை புத்தர்சிலை

## சந்தேகநபர்கள் அனைவருக்கும் நேற்றுப் பிணை

திருமலை, பெப். 12
திருகோணமலை டச்பே கடற்கரையில் சட்டவிரோதமாகக் கட்டுமானம் அமைத்து, புத்தர் சிலையைப் பிரதிஷ்டை

»11



## குமாரபுரம் படுகொலை: பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 12
திருகோணமலை மூதூர் குமாரபுரம் படுகொலைகளின் 30ஆவது நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நினைவுத்தூபியில் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்

»11

படையெடுக்கும் சுற்றுலாவிகள்

## 'நிபா' பரவலைத் தடுப்பதற்கு இலங்கை தீவிர கண்காணிப்பு

விரிவு பக்கம்:-03





முச்சந்தி முரளி

"உந்த மழைக்கு எங்களை விட்டிட்டுப் போக மனமில்லாமல் இஞ்சையே சுத்திக்கொண்டு நிக்குது பாருங்கோ"

## ரயிலுடன் மோதி முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 12
தெல்லிப்பழை - மாவிட்டபுரம் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.
நடராசா செல்லத்துரை (வயது -84) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-21)

## தேசிய மட்ட மகளிர் கால்பந்தாட்டம் யூனியன் கல்லூரி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 12
தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடரில் 14 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை வீழ்த்தி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனானது.
கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மா

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4344 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 02 07 13 74 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1411 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 33 34 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0370 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 4 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2450 |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 15 23 51 70 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6102 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 3 2 5 9 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2132 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 08 21 61 75 |
| விசேட எழுத்து | K |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0218 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 59 65 |

# சைபர் பாதுகாப்பு மையத்துடன் இணையும் அரச நிறுவனங்கள்

**கொழும்பு, பெப்.12**

**இலங்கையின் முன்னணி அரச நிறுவனங்களை தேசிய சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மையத்துடன் இணைப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.**

முதற்கட்டமாக 37 முன்னணி அரச நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களையும் இணைக்கும் இரண்டாம் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்படும். அரச இணையத்தள ஊடுருவல்கள், ரென்சம்வேர் தாக்குதல்கள் மற்றும் தகவல் திருட்டுகளிலிருந்து அத்தியாவசியச் சேவைகள் முடங்குவதைத் தடுக்க இந்தப் புதிய பொறிமுறை வழிவகுக்கும். தேசிய சைபர் பாதுகாப்பு மையத்தின் ஊடாக அச்சுறுத்தல்களை உடனுக்குடன் கண்காணித்தல் மற்றும் முன்கூட்டியே எச்சரிக்கும் வசதிகள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட பேருந்துச் சேவை!

கொழும்பு, பெப்.12

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி விசேட தேவையுடையவர்களுக்கு வசதிகளுடன்கூடிய குளிரூட்டப்பட்ட தாழ்தள பேருந்துச் சேவையை ஒரு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 10 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதி குறித்த பேருந்துகள் நாட்டை வந்தடையவுள்ளன.

இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான பௌதீக மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இயலுமை இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அந்தவகையில் இலங்கை போக்குவரத்துச் சபையின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் நிறுவனமான லங்கா மெட்ரோ ட்ரான்சிட்டிடம் இந்த 10 பேருந்துகளையும் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்துகளையும் அவற்றின் இயக்க நடவடிக்கைகளையும் அந்த நிறுவனத்தின்கீழ் முன்னெடுப்ப தற்குப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்கு விசேட கொடுப்பனவுகள்!

கொழும்பு,பெப்.12



இலங்கையில் கொக்கோ, மிளகு மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 920 ரூபாவை நாளாந்தக் கொடுப்பனவாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அதிவிசேட வர்த்தமானி, தொழில் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டீ. என்.கே. வடயலித்தவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஒரு ஹெக்டேயருக்கு 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (ச-இ)



## மீனவர்கள் போராட்டத்தால் மீன்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப்.12

உழவு இயந்திரங்களில் பொருத்தப்பட்ட விஞ்ச் இயந்திரங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் கரைவலை மீன்பிடித்தொழிலுக்கு அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்கக்கோரி மீனவர்கள் முன்னெடுத்துவரும் சத்யாக்கிரகப் போராட்டம் காரணமாக கொழும்புச் சந்தைகளில் மீன்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தையில் தோரா மீன் 3,600 ரூபாவுக்கும் பாரை மீன் 3,000 ரூபாவுக்கும் கெலவல்லா மீன் 2,700 ரூபாவுக்கும் பலயா மீன் 2,000 ரூபாவுக்கும் மற்றும் லின்னா மீன் 900 ரூபாவுக்கும் மற்றும் சாளையா மீன் 700 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. மீனவர்களின் இந்தப் போராட்டம் மேலும் நீடித்தால், வரும் நாள்களில் மீன்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0810 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 3 7 0 4 7 0 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3076 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 02 11 29 53 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 03 20 29 75 |
| வெற்றி வாரம் | 5237 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0906 |
| வெற்றி இலக்கம் | 05 48 49 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 12 35 49 51 |
| சீட்டிழுப்பு வாரம் | 4788 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 14 34 48 53 |
| வெற்றி வாரம் | 2252 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 11.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 11 42 44 62 |
| வெற்றி வாரம் | 2902 |

### போராடுவது மக்களின் உரிமை

## கரைவலை போராட்டத்துக்கான தடை விண்ணப்பம் நிராகரிப்பு!

கொழும்பு, பெப்.12

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கரை வலை மீனவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி கோட்டைப் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உழவு இயந்திரங்களில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கரை வலை மீன்பிடி நடவடிக்கைக்குத் தற்போதைய அரசாங்கம் தடை விதித்துள்ளது. இந்தத் தடையை நீக்கி தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி மீனவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்தப் போராட்டத்தால் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்தப் போராட்டத்தை உடனடியாக நிறுத்துவதற்கு உத்தரவிடவேண்டும் எனக்கோரி கோட்டைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த கோட்டை நீதிவான் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்து பொதுமக்கள் அமைதியான முறையில் தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது அவர்களின் அடிப்படை உரிமையாகும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தைத் தடைசெய்ய முடியாது எனத் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படையெடுக்கும் சுற்றுலாவிகள்

# 'நிபா' பரவலைத் தடுப்பதற்கு இலங்கை தீவிர கண்காணிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.12**
**உலகம் முழுவதும் சில நாடுகளில் பரவியுள்ள நிபா வைரஸ் தொடர்பில் இலங்கையின் சுகாதாரத்துறையினர் விசேட அவதானத்துடன் செயற்பட்டுவருகின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வரவுள்ள நிலையில் இந்தியாவில் பரவியுள்ளதாகக் கூறப்படும் நிபா வைரஸ் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகள் விமானநிலையத்தில் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர்.

கடந்த 4 நாள்களில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். ஜனவரியில் 2 இலட்சத்து 77 ஆயிரம் பேர் வந்துள்ளனர். இந்த நேரத்தில் சுகாதார அமைச்சு மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நீர் வழங்கல் சபையில் 1.2 கோடி ரூபா மோசடி

*மேலதிக பொதுமுகாமையாளர் கைது*

கொழும்பு, பெப்.12
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளர் ஒருவர், அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின்கீழ் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சபையின் தலைவருக்கு ஏற்கனவே இரண்டு அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், 'கண்டி வடக்கு பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின்' ஒப்பந்த நிதியைப் பயன்படுத்தி, விதிகளை மீறி மற்றுமொரு சொகுசு வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வாகனம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தாமலே ஒரு கோடியே 27 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை 'ஜீ. என். ஒட்டோ ஹோல்டிங்ஸ்' எனும் நிறுவனத்துக்கு வாடகையாகச் செலுத்தியுள்ளனர். இந்த நிறுவனத்திடமிருந்து வாகனத்தைப் பெறுவதற்காக, சந்தேகநபர் அரசாங்கத்தின் பெறுகை விதிமுறைகளை முற்றிலும் மீறிச் செயற்பட்டுள்ளார். இதனால் அரசாங்கத்துக்கு மிகப்பெரிய நிதி நட்டத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## அரச வெசாக் நிகழ்வுகள் இம்முறை மாத்தளையில்

கொழும்பு,பெப்.12
2026ஆம் ஆண்டுக்கான அரச வெசாக் நிகழ்வை மாத்தளை மாவட்டத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அகில இலங்கை சாசனரக்ஷ சபையின் பிரதம பதிவாளர் முகுனுவெல அனுருத்த தேரர் தெரிவித்துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான அரச வெசாக் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதி மாத்தளை கம்புருபிட்டிய, திஹகொட மிதெல்லவல விகாரையில் நடைபெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## இலஞ்சம் பெற்றனரென அரச அதிகாரிகள் கைது

கொழும்பு,பெப்.12
தெஹியத்தகண்டி வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தெஹியத்தகண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர் சேவையை விட்டுச் சென்றிருந்த நிலையில், அவரை மீண்டும் சேவையில் இணைத்து, கல்வி அமைச்சின்மூலம் தெஹியத்தகண்டி வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட பணியை நீடித்துக் கொடுப்பதற்காக, சந்தேகநபர்கள் இருவரும் 50 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகப்பெற்றுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கல்வி அமைச்சால் புதிய புலமைப்பரிசில்

கொழும்பு, பெப்.12
உயர்தரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, அதிக இசட் புள்ளிகளை ஈட்டிய மாணவர்களுக்காகக் கல்வி அமைச்சு புதிய மற்றும் பெரும் புலமைப்பரிசில் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற முன்னணிப் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தமக்கு விருப்பமான பட்டப்படிப்புகளைத் தொடர இத்திட்டம் வழிவகுக்கும்.

மொத்தம் 200 மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில வாய்ப்பு வழங்கப்படும். முதற்கட்டமாக ஏற்கனவே 32 மாணவர்கள் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்-என்றார்.




## விளையாட்டும் வினையும் -2

**வலிகாமம் வலயத்தில உள்ள பள்ளிக்கூடமொண்டில படிக்கிற ஒரு பொம்பிளைப் பிள்ளை தன்ர அம்மான்ர பேரை இப்பிடிப் பேனை மையால கையில பச்சை குத்திரமாதிரிச் செய்திருக்கிறா. ஆனால் அந்தப் பேனை மைப் பச்சை அழியாமல் கனநாளா அப்பிடியே இருந்திருக்கு. இதுக்கிடையில அந்தப் பிள்ளை மாகாண மட்டத்தில ஏதோ ஒரு விளையாட்டில செலக்ட் ஆகிட்டா. ஆனால் மாகாணமட்டத்திலயும், தேசிய மட்டத்திலையும் கையில இப்பிடி ஆரும் பச்சை குத்தி இருந்தால் விளையாட விடமாட்டினம். 'இந்தப் பிள்ளை கையில குத்தினது உண்மையான பச்சையில்லை, பேனைமையில விளையாட்டாக் குத்தின பச்சை தான்!' எண்டு சொன்னாலும் அதை ஆரும் ஏற்றுக்கொள்ளமாட்டினம். ஏற்றுக்கொள்ளவும் முடியாது. அதுதான் ரூல்ஸ்.**

**எண்டாலும்அந்தப்பள்ளிக்கூடத்து ஸ்போர்ட்ஸ் வாத்தியார் கொஞ்சம் மூளைசாலி. ஆராலையும் அழிக்கமுடியாத இந்தப் பச்சையை அழிக்க அவர் ஒரு வழி கண்டுபிடிச்சார். அதுதான் கஜூக்கொட்டை. அதில இருக்கிற பாலை விட்டால் தோலை அவிச்சுப் போடும். அப்பிடி அவிஞ்சு காயம் வந்தால், அதோட சேர்ந்து பேனைமையும் அழிஞ்சு போடும் எண்டு அவர் சொல்லியிருக்கிறார். அந்தப் பிள்ளையும் வாத்தியார் சொன்னமாதிரி, கஜூப்பாலை தான் பேனைமையால குத்தின பச்சைக்கு மேல விட்டிருக்கு. அடுத்தநாள் அந்த இடத்தில கொப்பளம் போட்டு, காயமும் வந்திட்டு. ஆனால் காயம் மாற திரும்பவும் அந்தப் பேனை மைப் பச்சை சாகாவரம் பெற்ற சூரன் மாதிரி பல்லை இளிச்சுக்கொண்டு தெரிஞ்சிருக்குது. இப்ப அந்தப் பிள்ளை கையில விளையாட்டாக் குத்தின பேனைமைப் பச்சையால மாகாணமட்டப் போட்டியில பங்குபற்றேலையாம்.**

**விளையாட்டா செய்த சின்ன தொரு வேலை, இப்பிடி அந்தப் பிள்ளையின்ர தேசியமட்டப் போட்டிக்குப் போய் பதக்கம் வெல்லுற கனவிலை மண்ணையள்ளிப் போட்டு விட் டுது. இந்தப் பேனைமையை ஊசியால உள்ளுக்க ஏத்தேக்க, அந்த ஊசியில கறள் இருந்தா பிறகு ஏற்பாக்கி, அந்தப் பிள்ளையின்ர உயிருக்கு ஆப்பு வைக்கவும் சான்ஸ் இருக்கு. அதோட தோல் வருத்தங்களும் வரலாம் எண்டு டாக்குத்தர்மார் சொல்லுகினம். இனிமேல் சின்னப்பிள்ளையள் ஊசியும் மையுமா மசிந்தினால், கொஞ்சம் அவையை அவதானிச்சு,இப்பிடிப் பச்சை குத்திரமாதிரியான வேலையள் ஒண்டும் செய்யக்கூடாது எண்டு பெற்றாரும், ரீச்சர்மாரும் சொல்லி விளங்கப்படுத்தோணும். அப்பதான் அவைக்கு இதால வாற பாதிப்புகள் தெரிஞ்சு பேனைமைப் பச்சை குத்திர மாதிரி வினையா முடியிற விளையாட்டுக்களின்ர பக்கம் போகாயினம் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிக்கையாளர்களுக்கு தினசரி வெகுமதிகளை வழங்கும் புதிய யுகத்தைக் குறிக்கும் வகையில் நவீன லாயல்டி செயலியை அறிமுகப்படுத்தும் KEELLS NEXUS



KEELLS NEXUS தனது 25 வருடப் பாரம்பரியத்தை கொண்டாடும் வேளையில், பெப்ரவரி 13ஆம் திகதி அதிநவீன LOYALTY செயலியுடன் மீண்டும் புத்துயிர் பெறுகிறது. இலங்கையில் முதன்முதலாக COALITION LOYALTY முறையை அறிமுகப்படுத்தியதும், 2014இல் கையடக்கத் தொலைபேசி LOYALTY சேவையை முன்னெடுத்ததும் KEELLS NEXUS இன் சாதனைகளாகும். இந்தப் பாரம்பரியத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லும்வகையில், நவீன தொழில்நுட்பம், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஏற்ற தனித்துவமான வெகுமதிகள், KEELLS சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் என்ற வசதியுடன் வாடிக்கையாளர் அனுபவத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல KEELLS தயாராகிறது.

இன்று 20 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட KEELLS NEXUS, வாடிக்கையாளர்கள் KEELLS மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் சான்றாக விளங்குகிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் கீல்ஸ் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது. சுயசேவை கவுன்டர்கள் (SELFCHECKOUT), மேம்பட்ட சரக்கு மேலாண்மை அமைப்புகள் போன்ற புத்தாக்கத் தொழில்நுட்பங்களை ஏற்கனவே அறிமுகப்படுத்திய KEELLS, இப்புதிய செயலிமூலம் தொழில்நுட்ப அடிப்படையிலான சில்லறை வணிகத்தில் தனது முன்னோடித் தன்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இந்தப் பயணத்தின் அடுத்த கட்டமாக புதிய செயலி அமைகிறது. வெகுமதிகள், சலுகைகள், கணக்கு விபரங்கள் அனைத்தும் எளிமையான ஒரே தளத்தில் கிடைக்கும். அனைத்து பரிவர்த்தனைகள், சேமிப்புகள் மற்றும் பங்காளர் சலுகைகளை ஒரே இடத்தில் கொண்டுவரும் இப்புதிய KEELLS NEXUS LOYALTY செயலிமூலம் வாடிக்கையாளர்களுக்கு அனைத்தையும் பார்க்கும் வசதியும் கட்டுப்படுத்தும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது. அத்துடன் அட்டை உரிமையாளர்கள் தாங்கள் பெற்றுள்ள புள்ளிகளை உடனுக்குடன் கண்காணிக்கவும், வெளியேறும்போது QR குறியீட்டை ஸ்கேன் செய்து உடனடி வெகுமதிகளை பெறவும் முடியும். இதன்மூலம் மிகவும் எளிதான மற்றும் பயனுள்ள ஷாப்பிங் அனுபவத்தைப் பெறலாம்.

இதுதொடர்பில், KEELLS சூப்பர்மார்க்கெட்ஸ் விற்பனைப் பிரிவின் தலைவரும், ஜோன் கீல்ஸ் குழுமத்தின் மூத்த துணைத் தலைவருமான நிலுஷா பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "நாம் இணைந்திருக்கும்போது தான் வாழ்க்கை முழுமையடைகிறது என்ற உணர்வே KEELLS NEXUS இன் இதயத்துடிப்பாகும். NEXUS என்ற பெயரிலுள்ள 'US' என்பது வெறும் எழுத்து அல்ல. அது நாங்கள் அன்போடு சேவை செய்யும் ஒவ்வொரு குடும்பமும், நாங்கள் வாழும் சமூகமும், தினமும் நம்மை மகிழ்விக்கும் சிறிய தருணங்களும்தான். இந்தச் செயலிமூலம் எங்கள் வாடிக்கையாளர்கள் பணம் சேமிப்பது மட்டுமல்ல, சிறப்புச் சலுகைகளை அனுபவிப்பதோடு, அக்கறையும் நம்பிக்கையும்; நிறைந்த ஒரு குடும்பத்தின் அங்கமாக உணரவும் உதவுகிறது." என்றார்.

இந்த அடுத்த தலைமுறை தளத்தை உருவாக்க, KEELLS உலகளாவிய வர்த்தக நாமங்களுக்கு சிறந்த செயற்றிறன் கொண்ட செயலிகளை உருவாக்குவதில் புகழ்பெற்ற மொபைல் தொழில்நுட்பத் துறையின் முன்னணி நிறுவனமான APADMI உடன் கைகோர்த்துள்ளது. அதுமட்டுமல்லாமல், SALESFORCE மற்றும் CYNTEXA உடனான மூலோபாயக் கூட்டணியும் இந்தச் செயலியின் பின்னணி செயற்பாடுகள் குறைபாடின்றி இயங்குவதை உறுதிசெய்தது.

இதுதொடர்பில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சில்லறை வணிகப் பிரிவின் தகவல் தொழில்நுட்பத் தலைவரும், மூத்த துணைத் தலைவருமான ஓசந்த வர்ணகுலசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "APADMI உடன் இணைந்து பணியாற்றியது எங்களுக்கு மறக்கமுடியாத கற்றல் அனுபவமாக அமைந்தது. மொபைல் தொழில்நுட்பத்தில் உண்மையான நிபுணர்களுடன் நாங்கள் கைகோர்த்தோம். தயாரிப்பு மேம்பாடு மட்டுமின்றி, ஸ்பிரிண்ட் திட்டமிடல், பயனர் அனுபவம், டிஜிற்றல் கட்டமைப்பு ஆகியவற்றிலும் சிறந்த நடைமுறைகளை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டோம். அவர்களின் ஆழமான அறிவு, எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்றவகையில் எளிமையாகவும் விரிவாக்கத்திற்கு உகந்ததாகவும் ஒரு LOYALTY தளத்தை உருவாக்க எங்களுக்கு உதவியது. SALESFORCE மற்றும் CYNTEXA நிறுவனங்களை உள்ளடக்கிய இந்த ஒருங்கிணைந்த கூட்டணி, செயலியின் வெற்றிகரமான அறிமுகத்திற்கும், தடையற்ற செயற்பாட்டிற்கும் தேவையான பின்னணி அமைப்புகளை வலுப்படுத்தியது." எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டாண்மை குறித்தும் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வை குறித்தும் APADMI நிறுவனத்தின் தலைமை வளர்ச்சி அதிகாரி மார்க் கொலின் கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கச் சிந்தனையை தன் ஆன்மாவாகக் கொண்ட KEELLS நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதில் நாங்கள் மிகுந்த பெருமை கொள்கிறோம். NEXUS REWARDS டிஜிற்றல் சேவைகளின் எதிர்காலத்தை புதிய பாதையில் கொண்டு செல்கிறது. சிறந்த வெகுமதிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வாடிக்கையாளர்களை உண்மையிலேயே ஈர்க்கும் ஒரு தனித்துவமான அனுபவத்தை உருவாக்குவதே எங்கள் குறிக்கோளாக இருந்தது. கண்டங்களைக் கடந்து இணைந்து பணியாற்றிய அணிகளின் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இந்தத் தளம் எவ்வாறு வளர்ச்சியடையும், KEELLS இற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான உறவை எப்படி மேலும் வலுப்படுத்தும் என்பதைக் காண நாங்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்." என்றார்.

இந்த மறுஅறிமுகத்தின் மூலம், KEELLS தன்னை ஒரு சில்லறை வணிக நிறுவனம் என்ற எல்லையைத் தாண்டி, நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு முன்னணி வர்த்தக நாமமாக தன்னை மீண்டும் நிலைநிறுத்திக்கொள்கிறது. KEELLS NEXUS ஒற்றுமை, மதிப்பு மற்றும் கூட்டு முன்னேற்றம் என்ற கொள்கைகளை தொடர்ந்து பிரதிபலிக்கிறது. அன்றாட ஷாப்பிங்கை ஒரு அர்த்தமுள்ள அனுபவமாக மாற்றுகிறது. புத்தாக்கத்தின் மறுபெயராகவும், தொழிற்றுறையில் முன்னோடியாகவும் KEELLS, இலங்கையின் மிகப் பழமையான மற்றும் நம்பகமான LOYALTY திட்டங்களில் ஒன்றை நவீனமயமாக்கி, வாடிக்கையாளர்களுக்கு உண்மையான வசதியையும் பெறுமதியான வெகுமதிகளையும் வழங்குகிறது.

## KEELLS NEXUS பற்றி

இலங்கையின் முன்னணி சில்லறை விற்பனை LOYALTY திட்டமான KEELLS NEXUS, KEELLS, சூப்பர் மார்க்கெட்கள் மற்றும் சில்லறை விற்பனை பங்காளர்கள் மூலம் சிறப்பு வெகுமதிகள், சலுகைகள் மற்றும் தனித்துவமான அனுபவங்களுடன் வாடிக்கையாளர்களை இணைக்கிறது. 2010ஆம் ஆண்டில் அட்டை அடிப்படையிலான தளமாக ஆரம்பித்த NEXUS, பின்னர் மொபைல் மையப்படுத்தப்பட்ட தீர்வாகவும், தற்போது முழுமையாக ஒருங்கிணைந்த செயலியாகவும் வளர்ச்சியடைந்து, மதிப்பு, வசதி மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஈடுபாட்டை வழங்கும் தனது பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது.

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் சங்கடம் தரக்கூடிய ஒரு செய்தி வந்துசேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** இன்று பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**தனுசு:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## ஒரே குட்டை ,ஒரே மட்டை...!


கிவுல் ஓயாத் திட்டம் மக்களுக்கானது. ஆதலால், அந்தத் திட்டம் ஒருபோதும் கைவிடப்படாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ. கிவுல் ஓயாத் திட்டம் கொண்டுவரப்பட்டால், வவுனியா வடக்கின் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படும். மக்களின் பலநூறு ஏக்கர் காணிகள் தண்ணீரால் விழுங்கப்படும் என்று ஒவ்வொரு வாரமும் பொதுமக்களும், சிவில் சமூக அமைப்பினரும், அரசியற்தலைவர்களும் போராட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். இவ்வாறான நிலையில்தான், கிவுல் ஓயாத் திட்டத்தைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என்றும், 2030ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முற்றாக நடைமுறைக்கு வரும் எனவும் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார் அமைச்சர் நளிந்த.

'மக்களின் விருப்பத்துக்கு மாறாக எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தமாட்டோம். மக்களின் காணி மக்களுக்கே சொந்தம்' என்றெல்லாம் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல்வேறு தடவைகள் கூறியுள்ளது. இருந்தபோதிலும், அந்தக் கூற்றுக்கள் எல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பொருந்தாது என்பதைப் போன்றுதான் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துவருகின்றன. மன்னார் மக்களின் விருப்பத்துக்கு மாறாக அங்கு காற்றாலைகள் அமைக்கப்பட்டன. திஸ்ஸ விகாரைக் காணிகளைக் கோரிப் போராடும் மக்களை இனவாதிகள் என்றனர். தற்போது, கிவுல் ஓயாத் திட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கு எதிராக இடம்பெறும் போராட்டங்கள் முழுக்க முழுக்க அரசியல் நோக்கம் கருதியவை என்கின்றனர். அவ்வாறெனில் 'இந்த அரசாங்கம் யாருக்கானது?' என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாக அமைகின்றது.

கிவுல் ஓயாத் திட்டத்தால் பலநூறு காணித் துண்டுகள் ஆக்கிரமிக்கப்படும் என்பதும், அந்தத் திட்டம் தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் என்பதும் பட்டவர்த்தனமான விடயங்கள். அநுர அரசுக்கு எதிராகச் செயற்படும் தென்னிலங்கைத் தலைவர்களைப் போன்று தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தில் வில்லங்கத்துக்கு குற்றச்சாட்டுகளை முன்வைக்கவில்லை. விஞ்ஞானபூர்வமான தகவல்களையும், ஆதாரபூர்வமான தரவுகளையும் முன்வைத்தே, தமது எதிர்ப்பை அவர்கள் பதிவு செய்துவருகின்றனர். இது அரசாங்கத்துக்கும் தெரியும். ஆனால், கிவுல் ஓயாத் திட்டம் கைவிடப்பட்டால், அதனால் ஏற்படும் இனவாத அரசியலைச் சமாளிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் இயலாது என்பதே உண்மை. இந்த இயலாத்தனத்தால், மிகவும் அபத்தமான திட்டத்துக்கு வெள்ளைச் சாயம் பூசி, அதைச் சான்றளிக்கவேண்டிய நிலையில் இருப்பதை எண்ணி அரசாங்கம் வெட்கித் தலைகுனியவேண்டும். கடந்த அரசாங்கங்களை மிகவும் மோசமான முறையில் விமர்சித்துவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட கிவுல் ஓயாத் திட்டத்துக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ் இவர்கள் எத்தகைய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றனர் என்பதை வலுவாகவே முரசறைந்திருக்கின்றது. தமிழர்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சிப்பீடம் ஏறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, மாறாக தொடர்ச்சியாக முதுகில் குத்தும் செயற்பாடுகளை ஆற்றிவருவது பெருந் துயரமே.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



### பொய்யாமொழி

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்
றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை**

**பொருள்:** தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.





## 'ஜி.எஸ்.பி. பிளஸ்' சலுகையைப் பெறுவதில் இலங்கை ஆர்வம்

**கொழும்பு, பெப்.12**
**ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை, மீளப் பெற்றுக்கொள்வதில் இலங்கை ஆர்வமாக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பவுலா பம்பலோனி தலைமையிலான உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் உள்ளிட்ட சுயாதீன நிறுவனங்களை வலுப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்தை முன்னெடுத்தல் போன்ற அரசின் சட்ட சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர் விவரங்களை முன்வைத்தார்.

இருதரப்பு விவகாரங்களுக்கு அப்பால், உலகளாவிய அரசியல் பொருளாதார மாற்றங்கள் மற்றும் பிராந்திய சவால்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. (எ-இ)

## பல்தரப்புச் சந்திப்புக்களில் ஐரோப்பிய ஒன்றியக்குழு!

கொழும்பு, பெப்.12
ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக் கூட்டு ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக்குழு மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளது. இந்தக்குழுக் கூட்டு ஆணைக் குழுக் கூட்டத்தின் முடிவில் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிடவுள்ளது. (எ)

## அகமதாபாத்துக்கு நேரடி விமானசேவை

கொழும்பு, பெப்.12
இந்தியாவின் அகமதாபாத் நகருக்கு இலங்கையில் இருந்து நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஊடாக கொழும்புக்கும் அகமதாபாத்க்கும் இடையே நேரடி விமானசேவைகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார். இதன் மூலம் இலங்கையில் உள்ள யாத்திரீகர்கள் குஜராத்துக்குச் சென்று புனிதத் தலங்களை தரிசிப்பதற்கான சிறந்த வாய்ப்பு உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தீ விபத்து

கொழும்பு, பெப்.12
கண்டியில் அக்குறணை, தொடங்கொல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று ஏற்பட்ட தீ பரவலில் 5 பேர் காயமடைந்துள்ளனர் என்று அலவத்துகொடப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எஇ)



## தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணைய சேவைக்கு வரவேற்பு

கொழும்பு, பெப்.12
கடந்த ஆண்டு 8 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சேவைகளை நிகழ்நிலை வழியாக அணுகியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மக்கள் www.elections.gov.lk என்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணைய தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இந்தச் சேவைகளைப் பெறலாம். வாக்காளர் பதிவுகளை டிஜிற்றல் மயமாக்கும் வசதியும் தளத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல், வாக்காளர்கள் தங்களது பதிவு விவரங்களை நிகழ்நிலையில் சரிபார்க்கமுடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை

வியாழக்கிழமை - தை 30

13.02.2026

சுபநேரம் : 08.04 - 09.34
ராகுகாலம் : 02.04 - 03.34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் எதிர்காலத்துக்கு தொழில் வழிகாட்டுதல் அவசியம்

## யாழ். மாவட்டச் செயலர் அழைப்பு

**யாழ்ப்பாணம், பெப்.12**

**யாழ். மாவட்டத்தில் காணப்படும் வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வழிகாட்டுதல்களை வழங்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் துறை சார்ந்த நிபுணர்கள் முன்வரவேண்டும் என யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.**

காங்கேசன்துறையில் அமையவுள்ள முதலீட்டு வலயம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியப்பாடுகள் தொடர்பான கருத்துப்பகிர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்துப் பலர் காத்திருக்கின்றனர். அதேநேரம், மாவட்டத்தில் பல தொழில் தருநர்களிடம் வேலைவாய்ப்புகள் உள்ளன. ஆனால், அவர்களுக்கும் வேலையற்றவர்களுக்கும் இடையே ஒரு இடைவெளி காணப்படுகிறது. இந்த இடைவெளியைக் குறைக்க நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். காங்கேசன்துறை முதலீட்டு வலயம் உள்ளிட்ட பல புதிய முதலீடுகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதால், ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகவுள்ளன. இளைஞர், யுவதிகளிடம் முறையான தொழில் வழிகாட்டுதல் அல்லது தெளிவு இல்லாமையே பெரிய சவாலாக உள்ளது. இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் தொடர்புடைய துறை சார்ந்த தரப்பினர் தகுந்த தொழில் வழிகாட்டுதல்களை வழங்க முன்வரவேண்டும்-என்றார். (ச-66)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.12

பண்டத்தரிப்பு வடலியடைப்பு புற்றடி ஆதிசங்கரி சமேத ஆதிசங்கரன் ஆலய அலங்கார உற்சவம் பெருவிழா ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாசிவராத்திரி அன்று காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். இதன்போது 'ஆதிசிவனின் சிவராத்திரி மகத்துவம்' எனும் விடயப்பொருளில் சைவசித்தாந்தப் பண்டிதர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப் பேருரையாற்றுவார். (ச)

## சிவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாணம், பெப்.12

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வருடாந்த மகாசிவராத்திரி விழா பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அம்பாளுக்கு 108 கலச சங்காபிஷேகமும், சிறப்புத் தீபாராதனைகளும் இடம்பெறும். அதைத் தொடர்ந்து இரவு நான்கு சாமங்களும் முறையே முதலாம் சாமத்தில் நவகலச சங்கபிஷேகமும், இரண்டாம் சாமத்தில் 108 கலச சங்காபிஷேகமும், மூன்றாம் சாமத்தில் 49 கலச சங்காபிஷேகமும், நான்காம் சாமத்தில் 25 கலச சங்காபிஷேகமும் இடம்பெறும்.

மறுநாள் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் அம்பாள் சமுத்திரத் தீர்த்தமாடி வீதி உலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெற்று மகேஸ்வர பூஜையும் நடைபெறும். (ச-66)

**கிளிநொச்சியில்**

## சுகாதாரமற்ற உணவகங்கள் 5 இலட்சம் ரூபா அபராதம்!

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட கண்டாவளை, பரந்தன் மற்றும் தருமபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் குறைபாடுகளுடன் இயங்கிய நிலையங்களுக்கு சுமார் 5 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவால் இந்தப் பகுதிகளிலுள்ள கடைகள் மற்றும் உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சுகாதாரமற்ற முறையில் இயங்கிய மற்றும் தரமற்ற பொருள்களை விற்பனை செய்த நிலையங்கள் கண்டறியப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான், பரந்தன் பகுதியிலுள்ள 5 பல்பொருள் விற்பனை நிலையங்கள், 4 உணவகங்கள் மற்றும் 2 வெதுப்பகங்களுக்கு மொத்தம் ரூ. 360,000 தண்டப்பணம் விதித்தார். அத்துடன் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் வரை 2 உணவகங்கள் மற்றும் ஒரு வெதுப்பகத்தை 14 நாள்களுக்குத் தற்காலிகமாக மூடுமாறும் உத்தரவிட்டார்.

கண்டாவளைப் பகுதியில் 2 பலசரக்குக் கடைகளுக்கு ரூ. 35,000 தண்டப்பணம் விதிக்கப்பட்டது. தருமபுரம் பகுதியில் பலசரக்குக் கடையொன்றுக்கு ரூ. 10,000 தண்டப்பணமும், இரண்டு உணவகங்களுக்கு ரூ. 125,000 தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. அத்துடன், குறித்த 2 உணவகங்களையும் 14 நாள்களுக்குத் தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிடப்பட்டது. (ச-113,214)




## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், பெப்.12

கீரிமலை வலித்தூண்டல் றோ.க.த.க. பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா நாளை 13ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜெயகிறிஸ்டோ தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-63)




## நல்லூர்ப் பிரதேசசபை சேவைகள் ஓரிடத்தில்

யாழ்ப்பாணம், பெப்.12

நல்லூர் பிரதேசசபையின் நல்லூர் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளணிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு வீண் அலைச்சல் அற்ற வினைத்திறனான சேவையை ஒரே கூரையின்கீழ் வழங்கும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேசசபையின் நல்லூர் உப அலுவலகப் பணிகள் அனைத்தும் நல்லூர்ப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார். (ச- 27)

## சட்டவிரோத மணல் கடத்தல் சாவகச்சேரியில் டிப்பர் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.12


போலியாகத் தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் ஒன்றைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட வீதி சோதனையின்போதே இந்தச் சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

பொலிஸாரைக் கண்டதும் டிப்பர் வாகனத்தை நிறுத்திவிட்டுச் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளார். சோதனையின்போது கடத்தப்பட்ட மணலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் போலியானது என்பது கண்டறியப்பட்டது. தப்பியோடிய சாரதியைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். அத்துடன் கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. (ச-131,28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 · 06 · 1951



மறைவு 10 · 02 · 2026

## பிலிப் மரியதாஸ்

சென்யூட் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் மரியதாஸ் 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு - லூர்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மரியஸ்ரெலா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி சந்திராவின் அன்புக் கணவரும், வினோ (ஜேர்மனி), டெனி (ஜேர்மனி), றொட்ணி (மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), டிமன் (அவுஸ்ரேலியா), தனுஷா தஸ்மினி (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), டினோசா (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோசேப்பு, பீற்றர், லெற்றீரியா, சவுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேந்திரா, சீனுஜா, றெனிஷியா, சுகன்யா, அஜந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆரோன், றொகாண், றோஷினி, சாரா, ஜோவான், ஷலோம், கிரண்ஷோ, கிளாரியோ, அன்லியா, நிமேரித், எபிஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.02.2026) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மனைவி - 077 161 0194
மகள் - 076 383 6179
மகன் - 077 474 3764

இளவாலை மேற்கு,
இளவாலை.

(CS) N-1

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.வயாவிளான் வேலுப்பிள்ளை ஸ்ரீ வித்தியாலயத்தின் வருடாந்தச் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் த.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.செந்தில்குமரன் பிரதம விருந்தினராகவும், வயாவிளான் மத்திய கல்லூரியின் அதிபர் சி.சந்திரமதி, இளைஞர் பயிற்சி நிலைய ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சு.ஞானலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஓய்வுநிலை ஆசிரியர் சுசீலா சாரங்கபாணி, ஓராயம் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி சி.தேவகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-66)

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.04.1940

சிவன் அடியில் 25.01.2006

## அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்திமுன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும், ஸ்தாபகர்– சிற்றி ஹார்ட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

*(திதி : அபரபக்க ஏகாதசி* (12.02.2026)

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன் வாழ வைத்த எங்கள் அப்பாவே !
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா !
தெய்வம்போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா !

எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D. 1/1 சென்ரல் றோட் , கொழும்பு – 12.
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பேரம்பலம் கணேசலிங்கம் (E.S.P)

உரிமையாளர் E.S. பேரம்பலம் அன் கம்பனி - கொழும்பு, யாழ்ப்பாணம். வாரிவளவு, காரைநகர்.

அன்னை மடியில் 18.06.1964

இறைவன் அடியில் 23.01.2017

திதி: 12.02.2026

நீதி வழி நடந்தவரே !
ஒன்பது ஆண்டுகள் கடந்தும், உங்கள் உழைப்பின் மணம் வீசுகிறது
நேர்மை தவறா உங்கள் வாழ்வு எமக்கு பாடம் சொல்கிறது.
கடின உழைப்பால் உயர்ந்து நின்ற ஆலமரமே
எவருக்கும் உதவிய ஈரமனமே !
கண்டிப்பும், உழைப்பும் ஒருபுறம், உங்கள் குறும்பு, சிரிப்பு மறுபுறம்
தன்னலமற்ற மனிதாபிமானமும், எளிமையான தோற்றமும்
இன்றும் உங்கள் பெயர் ஊரெங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்கிறது
பண்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே,
இன்னுயிர் துறந்து, இறையோடு கலந்த உங்களுக்கு
கண்ணீர் மலர்தூவி அஞ்சலி செலுத்துகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை பிரார்த்தனை செய்து கொண்டு
உங்கள் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

இல. 11 பெதெஸ்டா வீதி,
கொழும்பு - 04

மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.12

சுன்னாகம் - கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 2026ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின் அதிபர் ரி. லோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரி யின் பழைய மாணவரும் தற்பொழுது சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுமான ம. கோணேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரி யின்பழைய மாணவரும் மருத்துவ நிபுணருமான மருத்துவ கலாநிதி கே. சிவகுமார், வலிகாமம் வலயக்கல்விப்பணிமனை, உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், என். கஜேந்திரன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். (ச-131)

வீடு வாடகைக்கு உண்டு

யாழ். ஒடக்கரை வீதியில்
ஒரு அறை, குளியல் அறை,
கழிவறை கொண்ட
வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 177 0143

(CS/60712) J-1

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 16 காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள 12 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தை கொண்ட ஆதனம் V. சத்தியானந்தன் பெண் மகேஸ்வரி என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை பொன்னம்பலம் தியாகராஜா மகள் கமலநாயகி என்பவர் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவசுப்பிரமணியம் முகதாவில் 04.05.1966 ம் திகதி 6009ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் நிலப்பரப்பு 2 விஸ்தீரணத்தை கொண்ட ஆதனத்தை வேலுப்பிள்ளை சத்தியநாதன் பெண் மகேஸ்வரிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்தவர்களான சத்தியநாதன் கைம்பெண் மகேஸ்வரியும் சத்தியநாதனும் மோகன்ராஜ் சத்தியநாதனும், மனோராஜ் சத்தியநாதனும் சோபனா சத்தியநாதனும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவசுப்பிரமணியம் முகதாவில் 04.04.1977ம் திகதி 7956ம் இலக்க சீதன உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 9 அளவில் சொரியலாய் 20/19 அளவு கொண்ட ஆதனத்தை அப்புத்துரை லோகநாதன் பெண் ஜயந்தி என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சுண்டுக்குளி-12 காட்டுக்கந்தோர் ஒழுங்கை சத்தியநாதன் வினோதராஜ் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவசுப்பிரமணியம் முகதாவில் 05.02.1984ம் திகதி 9774ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் 20/1 நிலப்பரப்பு கொண்ட ஆதனத்தை அப்புத்துரை லோகநாதன் பெண் ஜயந்திக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல- 14 காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குளி தற்போது லண்டனைச் சேர்ந்த அப்புத்துரை லோகநாதனும் பெண் ஜயந்தியும் பிரசித்த நொத்தாரிசு S. கிருஷ்ணகுமார் முகதாவில் 05.12.1988ம் திகதி 773ம் இலக்க சீதன உறுதி மூலம் 2 பரப்பு கொண்ட ஆதனத்தை சதானந்தா கிருபானந்தா பெண் சோபனா என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் காட்டுக்கந்தோர் ஒழுங்கை இல-12, சுண்டுக்குளியைச் சேர்ந்த சதானந்தா கிருபானந்தா பெண் சோபனா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு M.தியாகராஜா முகதாவில் 13.10.2003ம் திகதி 6368ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 9 அளவு கொண்ட ஆதனத்தை பொன்னுத்துரை குகநேசன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் பிரதானவீதி 91ம் இலக்கத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை குகநேசனும் பெண் கலாநிதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V. தம்பி சிவலிங்கம் முகதாவில் 14.07.2004ம் திகதி 377ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தை முருகுப்பிள்ளை விஜயகுமாரியினதும் பெண் சசிகலாவினதும் சீவிய உரித்துக்கமைவாக பொன்னையா முருகுப்பிள்ளை பெண் காந்திமதி ஆகியோருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் சோரன்பற்று பளையச் சேர்ந்த பொன்னையா முருகப்பிள்ளையும் பெண் பெண் காந்திமதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V. தம்பி சிவலிங்கம் முகதாவில் 20.09.2004ம் திகதி 412ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தை பிரான்சிஸ் கிறிஸ்ரி நிர்மலாவின் சீவிய உரித்துக்கமைவாக பிரான்சிஸ் கிறிஸ்ரி அஞ்சலா என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல-25, புதிய பூங்கா வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீவகன் கிறிஸ்ரில்டா என்பவரால் பிரசித்த நொத்தாரிசு அன்ரனி அனுஜா முகதாவில் 19.07.2025ம் திகதி 356ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தை லியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் ஆகியோருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, J/73 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள "ஆராச்சியார் தாழ்வு வயலும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 2 குளி 09. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. லாசரஸ் அவர்கள் 01.02.1966ம் திகதி அளந்து தயாரித்த 3260 இலக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது மீளவும் 05.06.2004ம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர்.இரத்தினராஜா அவர்கள் 944ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்ட பகுதியாகிய நிலப்பரப்பு 2 குளி 7.27. இந்த நிலப்பரப்பு இரண்டு குளி ஏழு தசம் இரண்டு ஏழுக்குரிய எல்லை.

கிழக்கு - தியாகராசா மகள் கமலநாயகியின் ஆதனம்
வடக்கு - தியாகராசா மகள் கமலநாயகியின் ஆதனம்
மேற்கு - காட்டுக்கந்தோர் ஒழுங்கை
தெற்கு - குமாரசாமி சிவக்குமார் பெண் பாமாவின் ஆதனம்

இதடங்கலும் வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் உட்பட இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை லியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிபபடுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது லியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
யாழ் மாநகரசபை.

(ct:47046) (N-1)

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில்
மணிவிழாக் காணும் எங்கள் ஆசிரியர்

**திரு. சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி அவர்கள்**
**(SLTS - I) (BA, PGDE, M.A) (Tamil)**

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (12.02.2026) மணிவிழாக்காணும் ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வு காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

**சேவை விபரம்:**

★ பட்டதாரி பயிலுனர், நிருவாக உதவியாளர்
யா/வரணி மகாவித்தியாலயம் - 05.10.1994 - 31.03.1997
★ ஆசிரியர் - யா/வரணி மத்திய கல்லூரி - 01.04.1997 - 04.09.2011
★ யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் - 05.09.2011 - 31.12.2018
★ யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி - 01.01.2019 - 11.02.2026

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

(CS/60659) J-1

## மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா
## பெறுகை அறிவித்தல்

மீள்பாவனை பொருட்கள் விற்பனை செய்தல் - 2026 / 2027

வவுனியா பொது வைத்தியசாலையின் 2026 / 2027 ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் மீள்பாவனை பொருட்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மீள்பாவனை பொருட்கள் கேள்வி இல:- NP/04/43/DGHV/03/NCB/SALE/2026/01 | | | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை | கேள்வி பிணை |
|---|---|---|---|---|
| இல | விபரம் | ஆண்டுக்கான விற்பனை விபரம் | 2,000.00 | Rs.15,000.00, 28.05.2026 |
| 1 | வெற்றுக் காகித மட்டை | 5,000 Kg | | |
| 2 | வெற்றுக் கலன் 5 L | 5,000 | | |
| 3 | வெற்றுக் கலன் 10 L | 4,750 | | |
| 4 | வெற்றுக் கலன் 35 L | 300 | | |
| 5 | வெற்றுக் கலன் 50 L | 50 | | |
| 6 | சிரட்டை | 5,000 Kg | | |

1) பெறுகை ஆவணங்களை 12.02.2026 தொடக்கம் 26.02.2026 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விற்பனை பொருட்களை மேற்குறிப்பிட்ட நேரத்தில் பார்வையிட முடியும்

2) பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்.

3) அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 28.05.2026 வரை செல்லுபடியாகக்கூடிய ரூபா 15,000.00 பெறுமதியான பிணைமுறி அல்லது இதற்கு சமமான தொகையை எமது வைத்தியசாலையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

4) பிரதியுடன் கூடிய சகல பெறுகை ஆவணங்களும் **"தலைவர். பிராந்திய பெறுகைக் குழு. மாவட்ட பொது வைத்தியசாலை. கண்டி வீதி. வவுனியா"** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2026/2027 ஆம் ஆண்டிற்கான மீள்பாவனை பொருட்கள் விற்பனை செய்தல் "** என குறிப்பிடப்படல் வேண்டும்.

5) சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 27.02.2026 ம் திகதி மாலை 2.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும். பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் அன்று மாலை 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரம் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

6) மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம். மேலும் பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.

Dr.J.M. நிலக்ஷன்
தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா.
024 - 2228094, Fax : 024 - 2222262, Email : acctghv@gmail.com

(ct:47048)(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
31
.
10
.
1941



மறைவு
11
.
02
.
2026

## நடராசா செல்லத்துரை

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்லத்துரை அவர்கள் நேற்று (11.02.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் பாசமிகு கணவனும், அருட்செல்வன், சிவச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நதியா, சியாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவரூபன், தயாநிதி ஆகியோரின் பெரியதந்தையும், நிரோமிசா, பவித்திரன், விதுர்ஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (12.02.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
075 893 5117, 074 378 8074
வாளித்தொழிற்சாலை வீதி, மாவிட்டபுரம்.

(CS/31196) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு
27
.
05
.
1931



உதிர்வு
10
.
02
.
2026

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமதி கிருஷ்ணர் இரத்தினம்

யாழ்ப்பாணம் புத்தூரை பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணர் இரத்தினம் அவர்கள் க்டந்த 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - லக்சுமி தம்பதியரின் மருமகளும், பாபநாசிவம், கெங்கநாசிவம், கிருசாம்பாள், கலாமோகன், சந்திரமோகன் ஆகியோரின் தாயாரும், கனகேஸ்வரி, யோகேஸ்வரி, இந்திராணி, அகல்யா ஆகியோரின் மாமியாரும், பிரதீபன், பிரசாத், பிரகாஷ், ஜஸ்மினா, கிருஷாந், உதயமானி, திவாகர், அபிரா, கவிநிலா, பிரியங்கன், அபிராம், அபிலாஷ் மற்றும் ஜெயமோகன், ஜீவன்யா, தேனுகா, றொஷான், ரஜீந்திரா, திலக், சித்ராங்கன் ஆகியோரின் பேர்த்தியும், ரம்மிஜன், கம்ஷிகன், அக்ஷயன், ராட்னிஜா, கைலன், வர்ஷா, அபிநயன், அஸ்விக், ஜேடன், செனாலியா, பொமேஷ், சேனுஷா, அர்த்திக், ஆதித் ஆகியோரின் பூட்டியும், அமரர்களான நடராசா, சின்னத்துரை, கனகம்மா, இராசாத்தியம்மா மற்றும் தர்மலிங்கம், இராசதுரை, குணசிங்கம், இராணியம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2026) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 64 54 442
077 48 17 483

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31181) A

# மரண அறிவித்தல்

## சண்முகம் இராமச்சந்திரா

(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குநர் - இலங்கை மின்சார சபை)



துர்க்காபுரம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராமச்சந்திரா அவர்கள் கடந்த (10.02.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், நாகம்மா (இராஜேஸ்வரி) வின் சகோதரனும், முத்துக்குமாரு - இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், திருவருட் செல்வி (சுவிஸ்), அருந்ததி (லண்டன்), விக்னேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் பிரியதர்ஷினி (கொமர்சியல் வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நேமிநாதன் (சுவிஸ்), எழில்செல்வன் (லண்டன்), பாணுகா (லண்டன்), ரமேஸ் (செலான் வங்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன், சைந்தவி, சங்கவி, கயந்தினி, அஷ்விகா, அத்விகன், அதிசயன், நிகேஸ், அக்சரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2026) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் தெல்லிப்பளை கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 09.08.1949 மறைவு 10.02.2026

துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/31199) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் வீதி அகலிப்பு; ரூ.1,322 மில்லியன் ஒதுக்கீடு

**யாழ்ப்பாணம், பெப்.12**

**கண்டி-யாழ்ப்பாணம் வீதியின் வவுனியா நகருக்குட்பட்ட, 3 கிலோமீற்றருக்குட்பட்ட வீதி அகலப்படுத்தப்படவுள்ளது. இதற்காக ஆயிரத்து 327 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரதான வீதிகள், சிறு வீதிகள், கிராமிய வீதிகள் தொடர்பான விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றது.

அதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் வவுனியா பொலிஸ் நலன்புரிச்சங்கத்துக்கு அண்மையில் இருந்து, புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுள்ள பகுதிக்கும் இடையில் உள்ள 3 கிலோமீற்றர் நீளம் கொண்ட பகுதி (176-179 கி.மீ) அகலப்படுத்தப்படும். அதற்கமைவாக வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச்சந்தி மற்றும் மருத்துவ மனைச் சுற்றுவட்டம் என்பனவும் அகலப்படுத்தப்படும்.



அத்துடன் நகரப்பகுதியில் உள்ள வடிகான்கள் சீரமைக்கப்படுவதுடன், அவற்றிற்கு சிமேந்திலான மூடிகளை இடும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும்.

வவுனியா பொது மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இந்த வருடம் போக்குவரத்துச் சமிஞ்சை விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்தனர். (க-110)




## காப்பெற் வீதியாக மாறுகிறது திருநெல்வேலி முருகன் வீதி!

யாழ்ப்பாணம், பெப்.12

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட திருநெல்வேலி முருகன் வீதியைப் காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆடியபாதம் வீதியையும், பாற்பண்ணை வீதியையும் இணைக்கும் 800 மீற்றர் நீளமுள்ள இந்த வீதி நல்லூர்ப் பிரதேசசபையின் சொந்த வருமானத்தின் மூலம் காப்பெற் வீதியாக மாற்றப்படுகின்றது.

இந்த வீதி அபிவிருத்திப் பணிகளை நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் மற்றும் வட்டார உறுப்பினர்இ.வினோதன் ஆகியோர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-66)



தேசிய லொத்தர் சபையின்

## பிராந்திய முகவர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்கள்!

யாழ்ப்பாணம், பெப்.12

தேசிய லொத்தர் சபையின் (NLB) பிராந்திய முகவர்களுக்கான காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதி முதல்வர் வேட்பாளர் இம்மானுவேல் தயாளன், யாழ்ப்பாண மாநகரசபையின் உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன், தேசிய லொத்தர் சபையின் யாழ்.மாவட்டப் பிராந்திய முகாமையாளர்களான சுந்தரலிங்கம் நரேஸ், தனேஸ் எமர்சன் மற்றும் யாழ் மாவட்ட விற்பனை முகவர்கள் கலந்துகொண்டனர். (ச-26)

**பெண் பணியாளர்கள் தேவை**

மிக்சர் தொழிற்சாலைக்கு
பெண் பணியாளர்கள் தேவை.
**076 5830 277**

**கணக்கு உதவியாளர்கள் தேவை**

கொழும்பு வத்தளையில் அமைந்துள்ள
இந்திய சிமெந்து விநியோக
நிறுவனமொன்றுக்கு கணக்கு
உதவியாளர்கள் உடனடியாக தேவை.
உணவு, தங்குமிடவசதி வழங்கப்படும்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- **077 760 0444**
(CS/31197) J-1

**காணி விற்பனைக்கு**

இல. 37/1, செல்லர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்
அமைந்துள்ள "மாவடி வளவு" நில பர 1 குளி
3.1 அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
**076 245 1478, 074 147 7627**
(CS/31198) J-1

**மரண அறிவித்தல்**



பிறப்பு 14 . 01 . 1950
இறப்பு 10 . 02 . 2026

**கனகசபாபதி தர்மநாயகம்**
**(அகில இலங்கை சமாதான நீதவான் JP)**

கட்டுவனை பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி தர்மநாயகம் கடந்த 10.02.2026 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சுந்தரம் செல்வரத்தினம் (சுந்தரப்பா) - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூவின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (லண்டன்), துசாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதேசன், சிந்துஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிரன், மீனாட்சி, வருணிகா, விஷாகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஓய்வுபெற்ற கிராம சேவகர் கனகநாயகம், காலஞ்சென்ற வங்கி முகாமையாளர் ஸ்ரீகந்தநாயகம், ஜெயகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில்.
077 171 5729

தகவல்:
குடும்பத்தினர்.
(CS/30486) A

**மரண அறிவித்தல்**



ஆறுமுகநாவலரின் பூட்டன்
**முத்துக்குமாரு விஸ்வேஸ்வரன்**
**(முத்துக்குமாரு ஞானபூங்கோதை அவர்களின் மகன்)**
**(ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியர் [B.Com])**

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு விஸ்வேஸ்வரன் அவர்கள் நேற்று (11.02.2026) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், பிரபாலினி தவலோகநாதன் அவர்களின் தந்தையாரும், தவலோகநாதன் மதுரன், தவலோகநாதன் கமல்ராஜ், தவலோகநாதன் லக்கிராஜ், சனோகா டினோபிரசாத், தவலோகநாதன் கவிதரன் ஆகியோரின் பேரனும், அமரர் அருந்தவநாயகி, சத்தியவாகீஸ்வரன், கைலாசநாதன், சுசிலாதேவி, பாசுபதேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2026) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைலாசபிள்ளையார்
கோவில் பின்வீதி,
நல்லூர்.

தகவல்:
த.பிரபாலினி (மகள்)
077 825 8046
(CS 31200) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிஸ்...

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புகள் அனைத்தையும் ஓரணியில் இணைப்பதற்கு சுவிட்சர்லாந்து தூதரகத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி, தமிழ்த் தேசியப் பேரவையினர் சிவில் பிரதிநிதிகளுடன் ஒழுங்கமைத்துள்ள சந்திப்புக் காரணமாக பிற்போடப்பட்டு ள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்கமளித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியப் பேரவை எதிர்வரும் 15ஆம் திகதி சிவில் அமைப்புகளுடன் நடத்தவுள்ள கூட்டம் காரணமாக, சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் 19ஆம் திகதிய முயற்சிகள் கைவிடப்பட்டனவா? என்று நான் தூதரகத்தைத் தொடர்புகொண்டு வினவினேன். அதற்கு, 'நாங்கள் அந்த முயற்சியை கைவிடவில்லை. மாறாக சந்திப்பு தொடர்பாக பத்திரிகையில் வெளியான செய்தியால் இரகசியத் தன்மை இல்லாமல் போய்விட்டது என தமிழ்கட்சிகள் கருதலாம் என்று எண்ணினோமே தவிர, இதில் தூதரகத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை' என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

நான் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே சுவிஸ் இந்தப் பணிகளை முன்னெடுப்பதாகவும் தகவல் பரப்பப்பட்டுள்ளது. அதுவும் உண்மைக்குப் புறம்பான தகவலே. தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலர் சுமந்திரன்தான் சுவிட்ஸர்லாந்துத் தூதரகத்தைக் கேட்டு இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தார். 19ஆம் திகதி சந்திப்புக்கு எந்த விதத்திலும் நாங்கள் இடையூறாக இருக்கவில்லை. 15ஆம் திகதி நாங்கள் நடத்தப் போகும் சந்திப்பைக் குழப்புவதற்காகவே தமிழரசுக் கட்சி இத்தகைய பொய்யான கருத்துக்களை பரப்புவதாக நான் சந்தேகிக்கின்றேன்.

ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை தமிழர்களுக்குத் தீர்வாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பலம் உள்ளது. அவர்கள் எந்தவொரு தரப்பையும் கேட்காமல் ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அதிகாரம் உள்ளது. இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று ஒரு தீர்வை எடுக்காமல் விட்டால், எம்மை வரலாறு மன்னிக்காது. எனவே, இந்தச் சதியை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

2024ஆம் ஆண்டில் இருந்து இந்த முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். இதுவரை அத்தகைய முயற்சிகளில் இருந்து விலகியிருந்த நபர்கள் தற்போது பிறிதொரு முயற்சியை வேறொரு இடத்தில் ஆரம்பித்துவிட்டு, நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் முயற்சிகளை நிறுத்துவதற்கு நினைத்தால், அது தவறு. 19ஆம் திகதி சுவிட்ஸர்லாந்து தூதரகத்தால் நடத்தப்படும் சந்திப்பில் தமிழரசுக் கட்சியால் பங்கேற்க முடியுமென்றால், ஏன் 15ஆம் திகதி சிவில் பிரதிநிதிகளின் கலந்துரையாடலில் சந்திக்க முடியாது?

2029ஆம் ஆண்டுக்குள் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும். அந்த ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பு தமிழர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டால் அதற்குப் பிறகு தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை இருக்கின்றது என்று உச்சரிப்பதைக்கூட சர்வதேசம் ஏற்காது. - என்றார். (அ-ம-26)

## குமாரபுரம்...

பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

சுடர்கள் ஏற்றப்பட்டு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராமத்துக்குள் கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியன்று இராணுவத்தினர் நடத்திய சரமாரித் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவங்களால் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் 30ஆவது ஆண்டு நினைவுதினமே நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. (அ-ம-66)

## அல்லைப்பிட்டி...

தான காரணம் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளில் ஜனாதிபதியால் சுதந்திரமாக நடமாட முடிகின்றபோது, வாகனமொன்று நிறுத்தாமல் சென்றதற்காக துப்பாக்கிச்சூடு நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வாகனமொன்றை நிறுத்துமாறு கட்டளையிட்டு, அந்த வாகனம் நிறுத்தாமல் சென்றால் அதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மட்டுமே பொலிஸார் மேற்கொள்ள வேண்டும். மாறாக, சாரதியை சுட்டுக்கொல்ல முடியாது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளமையால்தான் பொலிஸார் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். அவசரகாலச் சட்டத்தின் ஊடாக பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் கணிசமான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. அந்த அதிகாரங்கள் கடந்த காலங்களில் மிகவும் மோசமான வகையில் பயன்படுத்தப்பட்டன. தற்போதைய சம்பவத்தையும் அவ்வாறே நோக்க வேண்டியுள்ளது.

குற்றம் செய்த பொலிஸாரே அந்தக் குற்றத்தை விசாரிப்பதை ஏற்க முடியாது. குற்றம் செய்தவர்களே அந்தக் குற்றத்தை விசாரிக்கும் சபிக்கப்பட்ட போக்கு மாற்றப்பட வேண்டும் - என்றார். (அ-ம-26)

## கலங்கரை...

வெளியேற வேண்டும் என்று நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் அண்மையில் கோரிக்கைவிடுத்திருந்தார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான தொல்பொருள் உதவிப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர், நகரபிதா மற்றும் நகரசபை உறுப்பினர்கள் இணைந்து கலங்கரை விளக்கப் பகுதியை நேற்று நேரில் பார்வையிட்டனர்.

இதையடுத்து இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே குறித்த கலங்கரை விளக்கப்பகுதியை விடுவிப்பதற்கு கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளது. (அ-ச-100)

## சந்தேகநபர்கள்...

செய்த விவகாரத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 பேரும் திருகோணமலை குற்றவியல் மேல்நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நேற்றுக் காலை இந்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திருகோணமலை குற்றவியல் மேல்நீதிமன்றத்தில் பிணைக்கோரிக்கை தொடர்பான வழக்கு நடைபெற்றது. இதன்போது சந்தேகநபர்கள் அனைவரையும் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவு குற்றவியல் மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. இதன்பின்னர் மீளவும் இந்த வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது அனைவரும் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சாட்சிகளை அச்சுறுத்தினால் அல்லது மீளவும் அத்துமீறிக் கட்டுமானங்களை அமைத்தால் பிணை ரத்துச் செய்யப்படும் என்று நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ-ம-50)

## வடக்கில்..

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென் கிழக்குத் திசையில் வளிமண்டலத் தளம்பல் நிலையொன்று காணப்படுகின்றது. இதனால், இன்று தொடக்கம் நாளைமறுதினம் வரை வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, மேற்கு, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக இன்று இரவு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சற்றுக் கனமான மழை கிடைப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதியளவில் வங்காள விரிகுடாவில் மீண்டுமொரு புதிய காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, 16ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (அ-ம-66)

## கைதான...

பட்ட துப்பாக்கிச் சூட்டில், 17 வயதான வாகனச்சாரதி உயிரிழந்தார். அந்த வாகனத்தில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் சந்தேகநபர்களின் சார்பில் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுவழக்கு மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, அவர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## தேசிய...

னிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முடிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (அ-ம)

## அத்துகோரள...

இடம்பெற்றபோது, 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறைகளில் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் இருவரும் அடித்துக் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் 42 பிரதிவாதிகளுக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், நேற்றையதினம் வழக்கு தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, 12 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (அ-ம)

## மாகாண நிதியொதுக்கீட்டின்கீழ் குடமுருட்டிப் பாலம் நிர்மாணம்!

வடக்கு பிரதம செயலாளர் தெரிவிப்பு



வவுனியா, பெப்.12

வவுனியா வடக்கு, நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள சிதைவடைந்த நிலையிலுள்ள குடமுருட்டிப் பாலத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தெரிவித்துள்ளார். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் வவுனிய மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மிகவும் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலம் சீரின்றிக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்றும், பல கூட்டங்களில் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் அமைச்சர் விளக்கம் கோரியபோது, பாலத்தை அமைக்க சுமார் 80 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே. கௌசிகன் தெரிவித்தார். இந்த ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து குடமுருட்டிப் பாலத்தை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தெரிவித்தார். (ச-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார்-புத்தளம் வீதிக்கு மாற்றுப் பாதையே தீர்வு!

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

**மன்னார், பெப்.12**
**மன்னாரில் இருந்து வில்பத்து வனப்பகுதி ஊடாக இளவன்குளத்தைச் சென்றடையும் வீதியைத் திறப்பதிலுள்ள சட்டச்சிக்கல்களைக் கருத்திற்கொண்டு அதற்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகளை பரிந்துரைப்பதே தற்போதைய அரசின் நோக்கம் எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
வில்பத்து வனப்பகுதியின் உயிர் பல்வகைத்தன்மைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்துச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முன்வைத்துள்ள கடும் எதிர்ப்பு, இந்தப் பகுதியில் உள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கான சட்ட வரம்புகள் மற்றும் இவ்விடயம் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகள் மற்றும் நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள் என்பவை இந்த வீதியை மக்களின் பயன்பாட்டுக்கு விடுவதற்குத் தடையாகவுள்ளன.
இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதால் மன்னார் மக்கள் எதிர்கொள்ளும் பெரும் சிரமங்களை அரசாங்கம் உணர்ந்துள்ளது. வில்பத்து வனப்பகுதியைச் சேதப்படுத்தாமல் பயணிக்கக்கூடிய மாற்றுப்பாதைகள் குறித்துச் சுற்றுச்சூழல் அமைச்சுடன் இணைந்து விரிவான பேச்சுகள் நடத்தப்படவுள்ளன.
எதிர்கால முடிவுகள் அனைத்தும் நீதிமன்றத்தின் உத்தரவுகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலான கலந்துரையாடல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சட்டவரம்புகளையும் மதித்து, பொதுமக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு இதற்கான தீர்வு எட்டப்படும்- என்றார். (ச-56)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மீண்டும் உருவாக்கப்படாது

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.12
இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுகளை முன்னெடுத்தாலும், அது 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு' என்ற பெயரில் பதிவுசெய்யப்படாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு போரதீவுப் பற்றுப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது உண்மையே. ஆனால், பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அது மீண்டும் பதியப்படமாட்டாது. அதற்குப் பதிலாக வேறு பெயர் அல்லது புதிய வடிவில் அந்த இணைப்பு அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 'தெய்வீகத் திருமுறைத் தேனமுதம்' சிவராத்திரியன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.12
சைவப்புலவர் கலாபூஷணம் இராசையா சிறீதரன் எழுதிய 'தெய்வீகத் திருமுறைத் தேனமுதம்' நூல் வெளியீட்டு விழா கொக்குவில் ஜம்புநாதர் கோவில் தென்காடு சிவமடத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி சிவராத்திரி தினத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டப அதிபர் செ.திருமாறன், உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா உள்ளிட்டோர் சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ச-100)



# டிறிபேர்க் கல்லூரியில் மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி, பெப்.12
சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் கல்லூரியின் முதல்வர் ஐ. தேவஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம அதிதியாக டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் முதல்வர் செ. பேரின்பநாதன், சிறப்பு விருந்தினராக டிறிபேர்க் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவரும் சங்கப் பொருளாளருமான து. ஸ்ரீசுடரோன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-28)

# தெய்வீக இசை அரங்கம்

யாழ்ப்பாணம், பெப்.12
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. இசைக் கலைமணி. நடேசு செல்வச்சந்திரன் குழுவினர் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வை நிகழ்த்துவர். (ச-66)

**வீடு விற்பனைக்கு**
அமெரிக்கமிஷன் பாடசாலை வீதி, அரசடி மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்கு உள்ளது. (மாவை சேனாதிராசா ஐயா வீட்டிற்கு அருகாமையில்.
தொடர்புகளுக்கு: உரிமையாளர்
S.ராசன்
077 35 30 930
CS 304791A

# அரசியல் மயப்படும் ஆட்சிமுறை ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்!

## சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.12
இலங்கையின் அரச சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நீதியை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிமுறை முன்னெடுக்கப்படுவது நாட்டின் ஜனநாயக அடித்தளத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
தொழில்முறை, திறமையான மற்றும் நேர்மையான அரச சேவை இல்லாமல் ஒரு அரசாங்கம் செயற்படமுடியாது
தற்போதைய அரசாங்கம் எஞ்சியுள்ள தொழில்முறை சார்ந்த அரச சேவையை சிதைத்துவிட்டு, அதற்குப் பதிலாக அனுபவமற்ற கட்சி விசுவாசிகளை நியமித்துவருகின்றது.
தகுதியற்றவர்களை நியமிப்பதன்மூலம் அரச நிர்வாகம் முடங்கும் அபாயம் உள்ளது. 2022ஆம் ஆண்டு ஆட்சித் தரத்தின் வீழ்ச்சியை உணர்ந்த பின்னரே மக்கள் வீதிக்கு இறங்கினர். எனவே ஆட்சி அணுகுமுறையை மாற்றாவிட்டால் நாடு மீண்டும் குழப்பத்தில் மூழ்கும் – என்றார். (ச-இ)

**வேலையாட்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் வகுப்பு மேற்பார்வையாளர், கிளார்க் தேவை.
தொடர்புகொள்ளும் நேரம்:
காலை 7.00am - மாலை 5.00pm
தொலைபேசி இலக்கம்:-
075 896 0575
(CS/60714) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மெயில் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org